டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 148 22.11.2025 SATURDAY KARTHIGAI : 5 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 148 22.11.2025 சனிக்கிழமை கார்த்திகை : 5 விலை : ரூ.5/–

3 கழிவுப் பஞ்சு விலை உயர்வால் உற்பத்தியை 50% குறைக்க ஓஇ மில்கள் முடிவு

4 கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த ஒன்றிய பாஜக அரசு : முதலமைச்சர் கண்டனம்

2 உதித்தது இன்னொரு திராவிட இயக்கம்... தனிக்கட்சி தொடங்கிய மல்லை சத்யா

# ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்க தென்னாப்பிரிக்கா புறப்பட்டார் பிரதமர் மோடி

புதுடெல்லி: நவ.22-

ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி தென்னாப்ரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு புறப்பட்டுச் சென்றார்.

புறப்படும் முன்னதாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "தென்னாப்பிரிக்காவின் தலைமையின் கீழ், ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெறும் இருபதாவது ஜி20 தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள, சிரில் ராமபோசாவின் அழைப்பின் பேரில், நவம்பர் 21 முதல் 23 வரை தென்னாப்பிரிக்கா பயணம் மேற்கொள்கிறேன்.

ஆப்பிரிக்காவில் நடைபெறும் முதல் ஜி20 உச்சிமாநாடு இது என்பதால், ஒரு சிறப்புமிக்க உச்சிமாநாடாக இருக்கும். 2023ம் ஆண்டில் இந்தியா ஜி20 தலைமைப் பொறுப்பில் இருந்தபோது, ஆப்பிரிக்க ஒன்றியம் ஜி20 அமைப்பில் உறுப்பினராகியது.

இந்த உச்சிமாநாடு முக்கிய உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்த ஆண்டு ஜி20 ன் கருப்பொருள் 'ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மை' ஆகும். இதன் மூலம் இந்தியாவின் புதுடெல்லி, பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற முந்தைய உச்சிமாநாடுகளின் முடிவுகளை தென்னாப்பிரிக்கா முன்னெடுத்துச் சென்றுள்ளது. 'வசுதைவ குடும்பகம்' மற்றும் 'ஒரே பூமி, ஒரே குடும்பம் மற்றும் ஒரே எதிர்காலம்' என்ற நமது தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இந்தியாவின் பார்வையை இந்த உச்சிமாநாட்டில் முன்வைப்பேன்.

மாநாட்டில் பங்கேற்கும் பிற நாடுகளின் தலைவர்களுடனான எனது உரையாடல்களையும், உச்சிமாநாட்டின் போது திட்டமிடப்பட்டுள்ள 6வது இந்தியாபிரேசில்தென்னாப்பிரிக்கா (ஐபிஎஸ்ஏ) உச்சிமாநாட்டில் பங்கேற்பதையும் நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியாவுக்கு வெளியே உள்ள மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய புலம்பெயர்ந்தோருடனான எனது உரையாடலையும் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.






# தேனி கூட்டுறவுத்துறையின் சார்பில் 72 வது கூட்டுறவு வார விழா

தேனி நவ.22

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்களில், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 1,141 பயனாளிகளுக்கு ரூ 11.16 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர்

தங்கதமிழ்செல்வன் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் பேசுகையில், கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகள் தொழில்முனைவோர், பெண்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பு மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து, சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றி வருகிறது. நூற்றாண்டிற்கும் மேற்பட்ட கட்டமைப்பை கொண்ட கூட்டுறவுத் துறையில் இந்தியாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிக்கும், கூட்டுறவுத்துறையில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் முதல்வர் மருத்தகம் மூலம் ஏராளமானோர் பயன்பெற்று வருகிறார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர், மேலாண்மை இயக்குநர் வாஞ்சிநாதன் கூட்டுறாவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நர்மதா, இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) இளங்கோ. பொது மேலாளர் (ஆவின்) ரமேஷ், துணைப்பதிவாளர் செல்வரா தேனி அல்லிநகரம் நகர்மன்ற துணைத்தலைவர் செல்வம், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டி மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

# சின்னமனூர் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம் பணிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு

தேனி நவ.22

தமிழகம் முழுவதும் எஸ் ஐ ஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட கீழ ரத வீதி பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம் நடைபெற்று.இதற்காக வார்டு பகுதிகளில் ஆங்காங்கே முகாம் அமைக்கப்பட்டு வாக்காளர் பட்டியல் சரிபார்த்து பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சின்னமனூர் பகுதியில் நடைபெற்ற இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமினை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு செய்தார்.

சின்னமனூர் பகுதியில் கிழ ரக வீதி மற்றும் நகராட்சியில் நடைபெற்ற முகாமில் பொதுமக்கள் கொடுக்கப்படும் மனுக்கள், அதனை பதிவு



செய்யும் முறைகள் குறித்து கேட்டறிந்தார்.மேலும் எஸ் ஐ ஆர் பதிவுகள் எந்த அளவில் உள்ளது என்பது குறித்தும் அதிகாரிகள் அரசியல் கட்சியினர் உள்ளிட்டோரிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது தேனி தெற்கு மாவட்ட கழக திமுக செயலாளருமான ராமகிருஷ்ணன்,சின்னமனூர் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு,நகர துணைச் செயலாளர் முத்துக்குமார், தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மனோகரன்,மாவட்ட பிரதிநிதி முத்துக்குமரன்,நகராட்சி ஆணையாளர் கோபிநாத், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும்,கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# 2026 சட்டமன்ற தேர்தலில் தேமுதிக இடம்பெறும் கூட்டணியே வெல்லும் பிரேமலதா விஜயகாந்த் சூளுரை

பழனி, நவ.22-

உள்ளம் தேடி இல்லம் நாடி பிரச்சார பயணத்தின் ஒருபகுதியாக பழனிக்கு வருகை தந்த பிரேமலதா விஜயகாந்திற்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட தேமுதிக சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து பழனி பேருந்துநிலையம் அருகே நடைபெற்ற கூட்டத்தில் வாகனத்தில் நின்றபடி பிரேமலதா பேசினார். அப்போது அவர் பேசியதாவது :

கேப்டன் விஜயகாந்த் தெய்வமாக இருந்து நம்மை வழி நடத்துகிறார். வருகிற 2026தேர்தல் தேமுதிகவிற்கு மிகமிக முக்கியமான தேர்தல் என்றும், தேமுதிகவை இப்படியே வைத்து பலன் அனுபவித்து கொண்டு இருக்க முடியாது. இந்த முறை தேமுதிக இருக்கும் கூட்டணியே வெற்றி பெரும். வருகிற ஆட்சி கூட்டணி ஆட்சி அமைவது உறுதி என்றும், தேமுதிக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் பன்னீர்செல்வம் ஆர்வகோளாறு காரணமாக ஒரு கூட்டத்தில் பிரதமர் பிரேமலதா என்று என்னை கூறிவிட்டார். தேமுதிக தொண்டர்களுக்கு நான்



முதல்வர், துணை முதலமைச்சர் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். எனக்கோ தேமுதிகவில் உள்ள ஒவ்வொரு தொண்டரும் நகராட்சி, ஊராட்சி கவுன்சிலர், மாவட்ட கவுன்சிலர், எம்எல்ஏ, எம்பி, மந்திரி ஆக வேண்டும் என்று ஆசைப் படுவதாகவும், வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் தேமுதிக சாதனை படைக்கும் என்றார். தமிழகத்தில் திமுக அதிமுக விற்கு அடுத்து தேமுதிக பெரிய கட்சி. தமிழகத்தில் உள்ள 63000பூத்களில் நிர்வாகிகள் அமைத்துள்ளது.இன்றைக்கு தலைவர் இல்லை என்றாலும் கட்சி முதலிடத்தில் இருப்பதற்கு கடைக்கோடியில் இருக்கும் ஆணிவேரான தொண்டர்களே காரணம் என்றார். பழனி கொடைக்கானல் பகுதியில் சுற்றுச்சூழலை காக்கவும், பழனியில் கொய்யா பழச்சாறு ஆலை, நெல் கொள்முதல் நிலையம், பழனிகொடைக்கானல் ரோப்கார் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். திமுக நிறைவேற்றாத திட்டங்களை தேமுதிக கூட்டணி வெற்றி பெற்று அனைத்து பணிகளையும் செய்யும் என்று தெரிவித்தார். பிரேமலதாவுடன் அவரது சகோதரரும் கழக பொருளாளரும் எல்.கே சுதீஷ் உடனிருந்தார். இந்நிகழ்வில் பழனி நகர செயலாளர் ஐயப்பன், கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் செல்வராஜ் மற்றும் துரைராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



# சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மந்தம்

## 26 ஆயிரம் வாக்காளர்களில் 5ஆயிரம் வாக்காளர்கள் மட்டும் பதிவேற்றம் செய்துள்ளனர்

சின்னாளபட்டி, நவ.22

சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அதிரடி உத்தரவால் கண்காணிப்பு அலுவலர் நியமனம் செய்யப்பட்டு வாக்காளர் சேர்க்கை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. 26ஆயிரம் வாக்காளர்களில் 5 ஆயிரம் வாக்காளர்கள் மட்டும் பதிவேற்றம் செய்துள்ளனர்.

சின்னாளபட்டியில் சுமார் 40ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 26ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். சின்னாளபட்டியில் உள்ள 18 வார்டுகளில் 26 வாக்குசாவடி மையங்கள் உள்ளன. சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மந்தமாக நடைபெற்று வந்தது. குறிப்பாக ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அகரம், தாடிக்கொம்பு, ஸ்ரீராமபுரம், கன்னிவாடி, சித்தையன்கோட்டை, ஆகிய பேரூராட்சிகளில் 50 சதவீதத்திற்கு மேல் வாக்காளர் சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில் சின்னாளபட்டியில் மட்டும் 23சதவீதம் மட்டும் வாக்காளர் சேர்க்கை இருந்தது. மாவட்ட ஆட்சியரின் அதிரடி உத்தரவால் சின்னாளபட்டி மற்றும் தருமத்துப்பட்டிக்கு ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தார், கிருஷ்ணமூர்த்தி கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் சின்னாளபட்டி பேரூராட்சியில் உள்ள கூட்ட அரங்கில் வருவாய்துறை மற்றும் சமூகநலத்துறையை சேர்ந்த அங்கன்வாடி பணியாளர்கள் தீவிரமாக எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரே நாளில் சுமார் 2ஆயிரம் பேருக்கு பதிவேற்றம் செய்துள்ளனர். இதுகுறித்து வருவாய்துறை அதிகாரி கூறுகையில் முறைப்படி விண்ணப்பங்களை வி நியோகம் செய்திருந்தாலும் பொதுமக்களின் ஆர்வமின்மையால் எங்களால் முறையாக தகவல் பெற முடியவில்லை தற்போது தீவிரமாக பணியில் ஈடுபட்டு வருவதால் வாக்காளர் சேர்க்கை அதிகரித்துள்ளது. ஒருவார காலத்திற்குள் அனைத்து பணிகளையும் முடித்துவிடுவோம் என்றார்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்களில், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கால்நடைத்துறை சார்பில் தலா ரூ.25,935/ மதிப்பிலான புல் நறுக்கும் கருவிகளை 30 விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வழங்கினார்கள்.



# உதித்தது இன்னொரு திராவிட இயக்கம்... தனிக்கட்சி தொடங்கிய மல்லை சத்யா

சென்னை, நவ.22-

மதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட மல்லை சத்யா 'திராவிட வெற்றிக் கழகம்' என்ற கட்சியை தொடங்கி யிருக்கிறார். அந்த வகையில் தமிழகத்தில் இன்னொரு திராவிட கட்சி உதயமாகி இருக்கிறது.

மதிமுகவில் துணை பொதுச்செயலாளராக இருந்த மல்லை சத்யாவுக்கும், வைகோ மற்றும் அவரது மகன் துரைவைகோவுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, மல்லை சத்யா கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்று, 'திராவிட வெற்றிக் கழகம்' என்ற பெயரில் தனது புதிய கட்சியை திராவிட இயக்க மூத்த தலைவர் திருப்பூர் சு.துரைசாமி மூலம் பிரகடனம் செய்தார் சத்யா.

கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக மல்லை சி.ஏ.சத்யா அறிவிக்கப்பட்டார். இணை ஒருங்கிணைப்பாளராக கராத்தே பழனிசாமி, முதன்மைச் செயலாளராக வல்லம் பசீர், துணை ஒருங்கிணைப்பாளர்களாக வழக்கறிஞர் சேலம் ஆனந்த ராஜ், அரசு பிரப ாகரன், வாசுகி பெரியா ர்தாசன், மாநிலச் செயலா ளர்களாக ஊனை பார்த்திபன், கோடை.பி.டி.திரவியம் உள்ளிட்டோர் நியமிக்கப்ப ட்டுள்ளனர்.

நிகழ்ச்சியில் மல்லை சத்யா பேசியதாவது: அரசியலில் 32 ஆண்டு காலம் ஒரு தலைவனுக்குப் பின்னால் என்னை முழுமையாக அர்ப்பணித்து, அந்த தலைவனுக்கு ஒரு மெய்க்காப்பாளனைப் போல் நான் இருந்தவன். அரசியல்படுத்தப்படாத தன் மகனுக்காக என் மீது துரோகப் பழியைச் சுமத்தி, என்னை இயக்கத்தில் இருந்து தூக்கி எறிந்துவிட்டார் அந்த தலைவன். அவர் சொன்ன 'துரோகி' என்ற ஒற்றைச் சொல்லால் தான், இன்றைக்கு இப்பேர்ப்பட்ட ஒரு எழுச்சி நடைபெறுகிறது. திராவிட இயக்க வரலாற்றில் இப்போது நாங்கள் புதிய சகாப்தத்தை தொடங்கி இருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

# காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் ஒப்பியல் ஆய்வு மையம், சமஸ்கிருதக் கற்றல் மையம் இரு மையங்களின் தொடக்க விழா



சின்னாளபட்டி, நவ. 22

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் ஒப்பியல் ஆய்வு மையம், சமஸ்கிருதக் கற்றல் மையம் ஆகிய இரு மையங்களின் தொடக்க விழா நடைபெற்றது.

காந்திகிராம பல்கலைக்கழகத்தில் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமிய கலைகள் புலத்தின் சார்பில் சமஸ்கிருதம் மற்றும் ஒப்பியல் ஆய்வு மையம், சமஸ்கிருத கற்றல் மையத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவிற்கு பல்கலை துணை வேந்தர் என்.பஞ் சநதம் தலைமை தாங்கினார். முதுநிலை பேராசிரியர் முனைவர் பாலகிருஷ்ணன், தமிழ்த்துறை முதுநிலை பேராசிரியர் முனைவர் ஒ.முத்தையா ஆகியோர் மையத்தின் தொடக்கவிழா குறித்து எடுத்துரைத்தனர். விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.பஞ்சநதம் பேசுகையில், பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் தொடர்பான மையங்கள் முதன்முதலாக இங்குத் தொடங்கப்படுவது வரவேற்பிற்குரியதாகும். சமஸ்கிருதம் தொன்மையான மொழி, செவ்வியல் மொழி. செம்மொழியான தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. சமஸ்கிருத நூல்கள் தமிழிலும் தமிழ் நூல்கள் சமஸ்கிருதத்திலும் நிறைய மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பண்பாடுகள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இரண்டு மொழிகளும் நமக்கு இரண்டு கண்கள் போன்றவை. இந்திய மொழிகள் பலவும் நமது பல்கலைக்கழகத்தில் கற்றுத்தரப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளைத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலம் முன்னெடுக்க வேண்டும். மாணவர்கள் பல்வேறு மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்புத் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும், என்றார். மாணவர்கள் சமஸ்கிருதத்தை எளிமையாகக் கற்றுக்கொள்ளும் வகையில் சான்றிதழ் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் சமஸ்கிருதத்தில் சான்றிதழ் மற்றும் டிப்ளமா படித்தால் வேலைவாய்ப்புகள் நிறைய உள்ளன. புது டில்லி மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் சமஸ்கிருத மொழியை எளிதில் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி வருகின்றது. இந்தித் துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் எம். சலீம் பெய்க் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக இந்தித் துறைத் தலைவரும் சமஸ்கிருதம் மற்றும் ஒப்பீட்டு ஆய்வுகள் மையத்தின் இயக்குநருமான முனவர் கந்தாரே சந்து லட்மன் வரவேற்றார். நிறைவாக நுண்கலை இணைப் பேராசிரியர் முனைவர் கா.கேசவ ராஜராஜன் நன்றி கூறினார். விழாவில் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் உட்பட ஏராளமாகக் கலந்துகொண்டனர்.



## இந்தியாவின் பல்வேறு மாநில சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

# மதி கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழா

## மதுரையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைப்பு

மதுரை, நவ.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவி குழு மகளின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். திட்டங்களின் பயனாக சுய உதவி குழுக்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு, வருமாய் ஈட்டி பொருளாதார சுயசார்பும் பெற்று வருகின்றனர். ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி துறையானது, கிராமப்புற கைவினை கலைஞர்கள் தங்களின் தயாரிப்பு பொருட்களைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுடன் இணைந்து, சாராஸ் எனப்படும் விற்பனை கண்காட்சி நடத்தி வருகிறது. மதி கண்காட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களன மூலிகை பொருட்கள், சணல் பொருட்கள், துணிப்பைகள், போன்ற கைவினைப் பொருட்களும், கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்களும் விற்பனை செய்திட 200 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியானது 2025 நவம்பர் 22 ஆம் தேதி முதல் 2025 டிசம்பர் 3 ஆம் தேதி வரை மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெறும். சிறப்பு மிக்க மதி கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவிற்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து பல்வேறு மாநில சுய உதவி குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் சுவையும், தரம் நிறைந்த உணவுப் பொருட்களை உண்டு மகிழ வருகை தருமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

## நிகழ்ச்சிகளுக்கு 10 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்: தமிழ்நாடு அரசு

சென்னை, நவ.22-

ரோடு ஷோ, ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் முன் என்ன தேதி, நேரம், எவ்வளவு பேர் பங்கேற்பார்கள் என விண்ணப்பிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. ரோடு ஷோக்களை பொருத்தவரை பிரச்சாரத்தை துவங்கும் இடம், முடிக்கும் இடங்களை குறிப்பிட்டு தாக்கல் செய்ய வேண்டும். நிகழ்ச்சிகளுக்கு 10 நாட்களுக்கு முன் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாமிரபரணி தண்ணீரை தனியார் நிறுவனங்களுக்கு 1 லிட்டர் ஒரு பைசாவுக்கு விற்பனை செய்வதா என நீதிபதிகள் அதிர்ச்சி

மதுரை, நவ.22-

தாமிரபரணி தண்ணீரை தனியார் நிறுவனங்களுக்கு 1 லிட்டர் ஒரு பைசாவுக்கு விற்பனை செய்வதா என நீதிபதிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தாமிரபரணி ஆற்றில் நீர் எடுக்கும் நிறுவனங்களிடம் இருந்து தண்ணீர் வரி பாக்கியை வசூலிக்கக் கோரி வழக்கு தொடரப்பட்டது. தண்ணீர் வரி பாக்கியை வசூலித்து அந்த நிதியை ஆற்றின் பாதுகாப்பு, புனரமைப்புக்கு பயன்படுத்த வேண்டும். 20 ஆண்டாக தண்ணீர் விலையை உயர்த்தாதது ஏன் எனவும் தாமிரபரணியில் இருந்து எத்தனை நிறுவனங்கள் தண்ணீர் எடுக்கின்றன எனவும் உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் எடுக்கப்படுகிறது என்பது குறித்து நெல்லை

மாவட்ட ஆட்சியர் பதில் தர ஆணையிட்டுள்ளது.



# கற்பக விருட்ச வாகனத்தில் பத்மாவதி தாயார் பவனி

திருப்பதி, நவ.22-

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில் கார்த்திகை மாத வருடாந்திர பிரம்மோற்சவம் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

இதில் 4ம்நாளான நேற்று கற்பக விருட்ச வாகனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் அலங்காரத்தில் தாயார் 4 மாட வீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு ஹனுமன் வாகனத்தில் பக்தர்களுக்கு காட்சியளி த்தார். பிரம்மோற்சவ விழாவில் மாட வீதிகளில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் அனை வரையும் கவர்ந்தன. பிரம்மோற்சவத்தின் 5ம் நாளான இன்று காலை பல்லக்கு உற்சவமும், இரவு பிரசித்தி பெற்ற கஜ வாகன சேவையும் நடைபெற உள்ளது.

பிரம்மோற்சவத்தை முன்னிட்டு திருச்சானூர் கோயில் கோபுர வாசல் முதற்கொண்டு, கொடி மரம், பலிபீடம், விமான கோபுரம், தெப்பக் குளம், மாட வீதிகள் என அனைத்து இடங்களும் மின்விளக்கு அலங்காரம் மற்றும் மலர் தோரணங்களால் ஜொலிக்கின்றன.



# காலிங்கராயன் பாசனப்பகுதியில் நெல் கொள்முதல் மையம் திறப்பு

ஈரோடு, நவ.22-

ஈரோடு, காலிங்கராயன் பாசனப் பகுதியில் நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில், வைராபாளையத்தில் நேற்று முன்தினம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் பவானி அருகே காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் இருந்து காலிங்கராயன் வாய்க்காலில் திறந்துவிட ப்படுகிறது. இப்பாசனப் பகுதியில் சுமார் 15,745 ஏக்கரில் பெருமளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தவிர, மஞ்சள், வாழை, தென்னை உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

தற்போது, இப்பாசன பகுதியில் சுமார் 9,000 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்துள்ள நிலையில் கடந்த 15 நாள்களாக அறுவடைப் பணி நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக விவசாயிகளிடமிருந்து, நேரடியாக நெல்லை கொள்முதல் செய்திட நேற்று முன்தினம் ஈரோடு, வைராபாளையத்தில் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு, சன்ன ரகம் கிலோ ரூ.25.45க்கு அதாவது குவிண்டால் ரூ.2,545க்கும், பொதுமோட்டா ரகம் கிலோ ரூ,25 குவிண்டால் ரூ.2,500க்கும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இது குறித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் கூறுகையில, ''இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தினமும் 1,000 மூட்டை என்ற கணக்கில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளில் அதிகமாக அறுவடை நடந்தபோது, கணபதிபாளையம் பகுதியில், கூடுதலாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. தற்போது அறுவடை தொடங்கி உள்ள நிலையில், தேவையின் அடிப்படையில் டிசம்பர் இறுதியில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையம் திறப்பது குறித்து பரிசீலிக்கப்படும்'' என்றார்.

# 23 கட்டணமில்லா சேவைகளுக்கு ரூ.117 கோடி செலவு: பழநி கோயில் தேவஸ்தானம் தகவல்



பழநி, நவ.22-
பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வழங்கப்படும் 23 கட்டணமில்லா சேவைகளுக்காக ரூ.117 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கோடிக் கணக்கான பக்தர்கள் பயனடைந்துள்ளதாக, தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவஸ்தானம் மூலம் நாள் முழுவதும் அன்னதானம், பஞ்சாமிர்த பிரசாதம் வழங்குதல், கிரிவலப் பாதையில் பக்தர்கள் செல்வதற்காக பேட்டரி கார்கள் வசதி உள்ளிட்ட 23 இனங்களின் கீழ் கட்டணமில்லா சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த 2021 மே 7 முதல் 2025 அக்.31 வரை கடந்த நான்கரை ஆண்டுகளில் நாள் முழுவதும் அன்னதான திட்டத்துக்கு ரூ.41.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 97.50 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர்.

இதேபோல், இலவசமாக முடிகாணிக்கை செலுத்துவதற்கு ரூ.21.08 கோடி செலவாகியுள்ளது. இத்திட்டத்தில் 46.86 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர். முதலுதவி சிகிச்சை மருத்துவ மனைக்கு ரூ.1.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு 2.94 லட்சம் பக்தர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தேவஸ்தான கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்துக்கு ரூ.7.70 கோடி செலவு செய்யப்பட்டதில், 8.75 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டத்துக்கு ரூ.1.87 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 5.84 லட்சம் பக்தர்கள் பயனடைந்துள்ளனர்.

கைக்குழந்தைகளுக்கு காய்ச்சிய பால், இலவச திருமணம், காலணி பாதுகாப்பகம் உள்ளிட்ட கட்டணமில்லா சேவைகளுக்கு மொத்தமாக ரூ.117 கோடியே 72 லட்சத்து 40 ஆயிரத்து 913 செலவாகியுள்ளது. இதன்மூலம் கோடிக் கணக்கான பக்தர்கள் பயனடைந்துள்ளனர் என, தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

# நெல் ஈரப்பதம், விவசாயிகள் நிவாரணம் விவகாரம்: திமுக கூட்டணிக் கட்சிகள் தஞ்சை, திருவாரூரில் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை, நவ.22-
நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி'களின் சார்பில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ள ஒன்றிய பாஜக. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் 23.11.2025 அன்று தஞ்சாவூரிலும், 24.11.2025 அன்று திருவாரூரிலும் காலை 10.00 மணியளவில் 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்க முயற்சி: அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு சீமான் கண்டனம்

சென்னை, நவ.22-
ஆலந்தூரில் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்க முயல்வதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சென்னை ஆலந்தூர் அய்யப்பந்தாங்கல் பரணிபுதூர் கல்லூரி சாலையில் இயங்கிவரும் 'லிட்டில் டிராப்ஸ்' ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடித்துவிடுவேன் என அமைச்சர் தா.மோ.அன்பரசன் மிரட்டல் விடுக்கும் காணொளி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. அன்னை தெரசாவால் தொடங்கி வைக்கப்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்த ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் 400க்கும் மேற்பட்ட முதியோர் பயன்பெற்று வரும் நிலையில், அதை இடித்துவிடுவேன என ஓர் அமைச்சரே மிரட்டல் விடுத்திருப்பது கண்டனத்துக்குரியது.

முதியோர் இல்லத்தைச் சுற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டி விற்பனை செய்துள்ள தனியார் கட்டுமான பெரு நிறுவனம், முதியோர் இல்லத்தை இடித்து அதன் வழியாகக் கழிவுநீர் கால்வாய் அமைக்க முயல்வதாகவும், அதற்கு அமைச்சர் துணை நிற்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தனியார் பெரு முதலாளிகளின் லாப நோக்கத்துக்காக, முதியோர் இல்லத்தை முடக்குவது ஏற்புடையதல்ல. திமுக அரசு தனியார் கட்டுமான நிறுவனத்துக்கு ஆதரவாகச் செயல்படுவதை கைவிட்டு, ஆதரவற்ற முதியோர் இல்லத்தை இடிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விஜய் பிரச்சாரத்துக்கு போலீஸ் அனுமதி மறுப்பு தளர்ந்து போன தவெக

சென்னை, நவ.22-
தவெக தலைவர் விஜய் சேலத்தில் டிச.4ம் தேதி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டு தவெகவினர் சேலம் காவல் ஆணையரிடம் நேற்று மனு அளித்தனர். ஆனால், கார்த்திகை தீபத் திருவிழா, பாபர் மசூதி இடிப்பு தினம் உள்ளிட்ட காரணங்களைச் சொல்லி அனுமதி மறுத்துள்ளது மாநகர காவல்.

தவெக தலைவர் விஜய் கடந்த செப்.13ம் தேதி திருச்சியிலிருந்து தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். ஆனால், எதிர்பாராத விதமாக செப்.27ம் தேதி கரூரில் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலால் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் அவரது பிரச்சாரப் பயணத்தில் பிரேக் விழுந்தது. இந்த நிலையில் டிச.4ல்சேலத்திலிருந்து மீண்டும் தனது பிரச்சாரப் பயணத்தைத் தொடர ஆயத்தமானார் விஜய்.

இதற்கு அனுமதி கோரி நேற்று சேலம் மாநகர் காவல் ஆணையரிடம் தவெக அளித்த மனுவில், டிச.4ம் தேதி சேலம் கோட்டை மைதானம், போஸ் மைதானம், ஜெஜ்ஜில்நாயக்கன்பட்டி ஆகிய மூன்று பகுதிகளில் ஏதேனும் ஒரிடத்தில் விஜய்யின் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தை நடத்த அனுமதி கோரியிருந்தது.

ஆனால் டிசம்பர் 3 மற்றும் 4ம் தேதிகள் கார்த்திகை தீபம் என்பதாலும், டிசம்பர் 6ம் தேதி பாபர் மசூதி இடிப்பு தினம் என்பதாலும் குறிப்பிட்ட தேதியில் விஜய்யின் கூட்டத்துக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்க முடியாது என அனுமதி மறுத்த போலீஸார், "மாற்று தேதியை குறிப்பிட்டு மனு அளித்தால் பரிசீலிக்கலாம்" என்று சொல்லி இருக்கிறார்கள்.

இதனால் மீள் விஜய்யின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த தவெக தொண்டர்கள் இதனால் தளர்ந்து போயிருக்கிறார்கள். என்றாலும் திட்டமிட்டபடி டிசம்பரிலேயே தனது பிரச்சாரப் பயணத்தை மீண்டும் தொடங்கிவிடுவார் விஜய் என தவெக நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கின்றனர்.

# கழிவுப் பஞ்சு விலை உயர்வால் உற்பத்தியை 50% குறைக்க ஓஇ மில்கள் முடிவு



சென்னை, நவ.22-
கிரே நூல் தயாரிக்கும் ஓபன் எண்ட்(ஓஇ) நூற்பாலைகளில் முக்கிய மூலப்பொருளான கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்க தொழில்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் 600 ஓஇ (கிரே நூல், கலர் நூல் இரண்டு தயாரிக்கும்) நூற்பாலைகள் உள்ளன. இவற்றில் 2.5 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஸ்பின்னிங் நூற்பாலைகளில் இருந்து பெறப்படும் கழிவுப் பஞ்சை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செயல்படும் 200(கிரே நூல் மட்டும் தயாரிக்கும்) 'ஓஇ' நூற்பாலைகளில் 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மறுசுழற்சி ஜவுளித் தொழில்கள் கூட்டமைப்பின் (ஆர்டிஎப்) தலைவர் ஜெயபால் மற்றும் தமிழ்நாடு ஓபன் எண்ட் நூற்பாலைகள் சங்க(ஓஸ்மா) தலைவர் அருள்மொழி ஆகியோர் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் செய்தியாளரிடம் கூறியதாவது: மத்திய அரசு, ஸ்பின்னிங் நூற்பாலைகள் பயன்பெறும் வகையில் பருத்திக்கு இறக்குமதி வரி 11 சதவீதத்தை டிசம்பர் இறுதி வரை ரத்து செய்துள்ளது. இதனால் பஞ்சு விலை குறைந்துள்ளது. அதே போல் பாலியஸ்டர், விஸ்கோஸ் போன்ற செயற்கை இழைகளுக்கு முன் அமல்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாடு உத்தரவையும் மத்திய அரசு நீக்கியுள்ளது.

இதனால் மேற்குறிப்பிட்ட மூலப்பொருட்கள் விலை சர்வதேச சந்தை விலையில் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சலுகைகளை பெற்றுக் கொண்ட ஸ்பின்னிங் நூற்பாலை தொழில்துறையினர் வெளியேற்றப்படும் கழிவுப் பஞ்சை கொண்டு லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வரும் 'ஓஇ' நூற்பாலைகள் பாதிக்கும் வகையில் விலையை தொடர்ந்து உயர்த்தி வருவது ஏற்புடையதல்ல.

தற்போது ஒரு கிலோ ரூ.100 ஆக இருக்க வேண்டிய கழிவுப் பஞ்சு(கோம்பர் நாயில் ரகம்) ரூ.108ஆக உயர்ந்துள்ளது. சாதாரண பஞ்சு விலை ஒரு கேண்டி ரூ. 6,000 குறைந்த நிலையில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் கழிவுப் பஞ்சு விலை ஒரு கிலோவிற்கு ரூ.8 வரை உயர்த்தியுள்ளனர்.

மேலும் விலை தொடர்ந்து உயர்த்தப்பட வாய்ப்பு உள்ளது. ஜவுளி சங்கிலித் தொடரிலுள்ள ஒரு பிரிவு தொழில்துறையை (ஓஇ) முற்றிலும் பாதிக்கக்கூடிய செயலாகும். கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்கும் 'ஓஇ' தொழில்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளில் 60 'ஓஇ' நூற்பாலை தொழில்துறையினர் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் நலிவடைந்து தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். கழிவுப் பஞ்சு விலையை ஸ்பின்னிங் நூற்பாலை நிர்வாகத்தினர் குறைப்பது மட்டுமே இப்பிரச்சினைக்கு தீர்வாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



# ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்க தென்னாப்பிரிக்கா புறப்பட்டார் பிரதமர் மோடி

புதுடெல்லி, நவ.22-
ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு புறப்பட்டுச் சென்றார்.


புறப்படும் முன்னதாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "தென்னாப்பிரிக்காவின் தலைமையின் கீழ், ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெறும் இருபதாவது ஜி20 தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள, சிரில் ராமபோசாவின் அழைப்பின் பேரில், நவம்பர் 21 முதல் 23 வரை தென்னாப்பிரிக்காவிற்கு பயணம் மேற்கொள்கிறேன்.

ஆப்பிரிக்காவில் நடைபெறும் முதல் ஜி20 உச்சிமாநாடு இது என்பதால், ஒரு சிறப்புமிக்க உச்சிமாநாடாக இருக்கும். 2023ம் ஆண்டில் இந்தியா ஜி20 தலைமைப் பொறுப்பில் இருந்தபோது, ஆப்பிரிக்க ஒன்றியம் ஜி20 அமைப்பில் உறுப்பினராகியது.

இந்த உச்சிமாநாடு முக்கிய உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்த ஆண்டு ஜி20ன் கருப்பொருள் 'ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மை' ஆகும். இதன் மூலம் இந்தியாவின் புதுடெல்லி, பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற முந்தைய உச்சிமாநாடுகளின் முடிவுகளை தென்னாப்பிரிக்கா முன்னெடுத்துச் சென்றுள்ளது. 'வசுதைவ குடும்பகம்' மற்றும் 'ஒரே பூமி, ஒரே குடும்பம் மற்றும் ஒரே எதிர்காலம்' என்ற நமது தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இந்தியாவின் பார்வையை இந்த உச்சிமாநாட்டில் முன்வைப்பேன்.

மாநாட்டில் பங்கேற்கும் பிற நாடுகளின் தலைவர்களுடனான எனது உரையாடல்களையும், உச்சிமாநாட்டின் போது திட்டமிடப்பட்டுள்ள 6வது இந்தியா பிரேசில்தென்னாப்பிரிக்கா (ஐபிஎஸ்ஏ) உச்சிமாநாட்டில் பங்கேற்பதையும் நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியாவுக்கு வெளியே உள்ள மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய புலம்பெயர்ந்தோருடனான எனது உரையாடலையும் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.



# சுற்றுலா பயணிகளால் சீன கோயில் தீயில் சாம்பல்

நியூயார்க், நவ.22-
சீனாவின் ஜியான்சு மாகாணத்தில் பென்குவாங் மலை உள்ளது. இங்கு சீனாவின் பாரம்பரிய கோயில்கள் உள்ளன. இந்நிலையில், அங்குள்ள வென்சாங் பெவிலியனில் உள்ள கோயில் கடந்த 12ம் தேதி புதன் கிழமை தீயில் எரிந்து சாம்பலானது.

இதுதொடர்பான புகைப்படங்களும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வைரலாயின. இந்த கோயில் கடந்த 2009ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

சீன இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியம் கொண்டு அந்தக் கோயில் கலை வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

அப்போது கோயிலுக்குள் மெழுகுவர்த்தி, ஊதுபத்திகளை கொளுத்தி வைப்பது வழக்கம். அதுபோல் சுற்றுலா பயணிகள் கடந்த 12ம் தேதி மெழுகுவர்த்தி, ஊதுபத்திகளை கொளுத்தி வைத்துள்ளனர். எளிதில் தீப்பற்றும் இடத்தில் அவற்றை ஏற்றி வைத்ததால் கோயில் தீப்பிடித்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல்



புதுடெல்லி, நவ.22-
ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு (டிஎஸ்சிஏ) நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மொத்தம் ரூ.824 கோடி மதிப்பிலான வெளிநாட்டு (இந்தியா) ஆயுத விற்பனை தொடர்பான 2 திட்டங்களுக்கு வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், ரூ.418 கோடி மதிப்பிலான எக்ஸ்காலிபர் ஏவுகணை மற்றும் ரூ.406 கோடி மதிப்பிலான ஈட்டி ஏவுகணை அமைப்பு ஆகியவை அடங்கும். இது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு இலக்குகளை ஆதரிக்கும்.

மேலும் அமெரிக்கா, இந்தியா இடையிலான ராஜதந்திர உறவை வலுப்படுத்தவும் இது உதவும். மேலும் இந்தோபசிபிக் மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அரசியல் நிலைத்தன்மை, அமைதி, பொருளாதார முன்னேற்றத்துக்கான முக்கிய சக்தியாக திகழும் ஒரு முக்கிய கூட்டாளியின் (இந்தியா) பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவும்.

இந்திய பாதுகாப்புத் துறைக்கு இது மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும். குறிப்பாக, துல்லியமான தாக்குதல் திறன் கொண்ட உபகரணங்களை வழங்குவதன் மூலம் இந்தியாவின் தற்போதைய மற்றும் எதிர்கால பிராந்திய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் மேம்படும்.

மேலும் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தவும் இது உதவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த அக்டோபர் 31ம் தேதி மலேசியாவின் கோலாலம்பூரில் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்செத்தை சந்தித்தார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பான 10 ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் தொடர்ச்சியாக ரூ.824 கோடி மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கி உள்ளது.

# "சட்டப்பேரவைத் தேர்தலிலும் பாஜக கூட்டணிக்கு ஜீரோ தான்!" செந்தில் பாலாஜி ஆருடம்



சென்னை, நவ.22-
மக்களவைத் தேர்தலைப் போல் சட்டப்பேரவைத் தேர்தலிலும் பாஜக கூட்டணிக்கு ஜீரோ இடங்களே கிடைக்கும் என முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி ஆருடம் சொல்லி இருக்கிறார்.

கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த அனுமதி மறுத்த மத்திய பாஜக அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் கோவையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதன் பின்னர், முன்னாள் அமைச்சரும் திமுக மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது: கோவையில், மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, தமிழக அரசின் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 15 மாதங்கள் அதை கிடப்பில் வைத்துவிட்டு, தற்போது மத்திய பாஜக அரசு, கோவை மெட்ரோ ரயில் திட்டத்துக்குஅனுமதி வழங்காமல் நிராகரித்துள்ளது.

அதற்கு அவர்கள் கூறும் சாக்குபோக்கு காரணங்கள் வியப்பை அளிக்கின்றன. பாஜக ஆளும் மாநிலங்களில் 20 லட்சத்துக்கும் குறைவான பல்வேறு மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்துக்கு அனுமதி வழங்கிய பாஜக அரசு, தமிழ்நாட்டில் கோவையிலும், மதுரையிலும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த அனுமதி தர மறுக்கின்றனர். அதற்கு, 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை உள்ளனர் என்ற காரணத்தை கூறுகின்றனர். கோவை மாநகரில் 16 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பின்னர், 14 ஆண்டு கால வளர்ச்சியை கருத்தில் கொள்ளாமல், மெட்ரோ ரயில் திட்டத்துக்கு அனுமதி தராமல், கோவை மாவட்ட மக்களுக்கு மத்திய பாஜக அரசு துரோகம் செய்துள்ளது. பாஜக ஆளும் மாநிலங்களில் 5 மாதங்களில் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் தரும் பாஜக அரசு, தமிழ்நாட்டுக்கு மட்டும் ஏன் 15 மாதங்கள் இருப்பில் வைத்து அற்பமான காரணங்களை கூறி நிராகரித்துள்ளது?

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களை வெற்றி பெற வைத்த கோவை மக்களுக்கு கூட மெட்ரோ ரயில் திட்டத்தை கொடுக்க மனமில்லாத அரசாக மத்திய பாஜக அரசு உள்ளது. 3வது முறையாக மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள பாஜக தமிழ்நாட்டில் செயல்படுத்திய சிறப்புத் திட்டம் என்ன? தமிழ்நாடு வளர்ந்து விடக்கூடாது, தமிழ்நாட்டு மக்கள் வளர்ச்சியடைந்து விடக்கூடாது என்ற குறுகிய மனப்பான்மையுடன் மத்திய பாஜக அரசு செயல்படுகிறது. தமிழில் பேசி, திருக்குறள் கூறி, வேட்டி சட்டை அணிந்து வந்தால் போதுமா?

கடந்தமக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் பாஜகவுக்கு ஜீரோ இடங்களை மக்கள் அளித்தனர். வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அந்த ஜீரோ எதிரொலிக்கும். பாஜகவுடன் கூட்டணி சேர்ந்துள்ள அதிமுகவுக்கும் ஜீரோ என்ற நிலையை அடையும். இவ்வாறு அவர் கூறினார்.



■ திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். பிரதீப் அவர்கள் உத்தரவின் பெயரில் திண்டுக்கல் டவுன் துணை காவல் கண்காணிப்பாளர் கார்த்திக் அவர்கள் திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் அதிரடி சோதனையில் பேருந்து நிலைய கடைகளில் வைத்து பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருட்கள் விற்பனை செய்தவர்கள் மீது கைது நடவடிக்கை மற்றும் போதை பொருட்கள் அனைத்தும் பறிமுதல்



■ பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினரும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளருமான கே.ஈஸ்வரசாமி அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு அருள்மிகு அமண லிங்கேஸ்வரர் திருக்கோயில் திருமூர்த்திமலையில், மூத்த தம்பதியர்கள் அறுபதாம் திருமண நிகழ்ச்சியில், மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை திருப்பூர் துணை ஆணையாளர் ஹர்ஷினி , செயல் அலுவலர் அமரநாதன், அறங்காவலர் குழு தலைவர் ரவி, திருப்பூர் தெற்கு மாவட்ட அவை தலைவர் ஜெயராமகிருஷ்ணன் , ஒன்றிய கழக செயலாளர்கள் செழியன் , செந்தில்குமார், தங்கராஜ் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மாரிமுத்து, மெட்ராத்தி தங்கராஜ், பொதுக்குழு உறுப்பினர் எம் ஆர் பாபு, முன்னாள் யூனியன் சேர்மன் மகாலட்சுமி முருகன், டாக்டர் ராஜபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு மூத்த தம்பதியர்களிடம் ஆசி பெற்றனர்.



## எ. புதூர் ராமச்சந்திரா நகரில் குடிநீர் கேட்டு காலி குடங்களுடன் பொதுமக்கள் திடீர் சாலை மறியல் : போக்குவரத்து பாதிப்பு

திருச்சி நவ.22

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட எடமலைப்பட்டிப்புதூர், ராஜீவ் காந்தி நகர் கரை பகுதியில் 80க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. ஆனால் கடந்த ஒரு வாரமாக சரிவர குடிநீர் கிடைக்கவில்லை. ஒரு குடம் தண்ணீர் குடிப்பதற்கு சுமார் 10 முதல் 15 நிமிடம் வரை ஆனது. அதுவும் போதிய அளவுக்கு கிடைக்கவில்லை.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பாஜக கண்டோன்மென்ட் மண்டல் தலைவர் கார்த்தி முன்னிலையில் எடமலைப்பட்டி புதூர் பஞ்சப்பூர் செல்லும் மெயின் ரோடு, ராமச்சந்திரா நகர் பகுதியில் காலி குடங்களுடன். நேற்று காலை திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது பற்றி தகவல் அறிந்த எடமலைப்பட்டி புதூர் போலீசார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததன் பேரில் போராட்டம் கைவிடப்பட்டது.

## தென்காசி வல்லம் பகுதியில் சாய் இண்டர்நேஷனல் சோசியல் சர்வீஸ் அறக்கட்டளை சார்பாக பெண்களுக்கான இலவச சுய தொழில் பயிற்சி




■ சாய் இண்டர்நேஷனல் சோசியல் சர்வீஸ் அறக்கட்டளை சார்பாக பெண்களுக்கான இலவச சுய தொழில் பயிற்சியாக, ஆரி வொர்க் பயிற்சி வகுப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வை அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் வெங்கடேஷ்வரன் தலைமையில் வகித்து தொடக்கி வைத்தனர். மாநில நிர்வாகி தேவி வரவேற்பு உரையாற்றினார். தென்காசி மாவட்ட மைய நிர்வாகி லாவண்யா சிறப்புரையாற்றினார். இதனை சமூக ஆர்வலர் குலசேகரமங்கலம் மனிஷா ஒருங்கிணைப்பு செய்தார். 20 க்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



■ திருச்சி உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம், கோட்டப்பாளையம் பகுதியில் செய்திமக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்ட காட்சி.

# கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த ஒன்றிய பாஜக அரசு : முதலமைச்சர் கண்டனம்

கோவை, நவ.22-

கோவை மாநகரில் பத்தாயிரத்து 740 கோடி ரூபாயிலும், மதுரையில் 11 ஆயிரத்து 368 கோடி ரூபாயிலும் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருந்தது.

கடந்த 10 மாதங்களாக இந்த திட்ட அறிக்கைகள் மீது எந்த முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட்டிருந்த ஒன்றிய அரசு தற்போது, மக்கள் தொகையை காரணம் கூறி இந்த 2 திட்டங்களையும் நிராகரித்து திட்ட அறிக்கைகளை திருப்பி அனுப்பியுள்ளது.

மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த நகரின் மக்கள் தொகை 20 லட்சத்துக்கு மேல் இருக்க வேண்டும் என்று கூறியுள்ள ஒன்றிய அரசு, கோவையின் மக்கள் தொகை 15.8 லட்சமும் மதுரை மக்கள் தொகை 10 புள்ளி 2 லட்சம் என்றும் தெரிவித்துள்ளது. அதேசமயம் இதே அளவிலான மக்கள் தொகை கொண்ட உத்தரபிரதேசத்தின்




ஆக்ரா மற்றும் கான்பூர், மகாராஷ்டிராவில் நாக்பூர் மற்றும் புனே, மத்திய பிரதேசத்தில் இந்தூர் மற்றும் குஜராத்தில் சூரத் ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த ஒன்றிய பாஜக அரசு முதலமைச்சர் கண்டனம் !

ஒன்றிய அரசின் இந்த செயல் தமிழ்நாட்டில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஒன்றிய பாஜக அரசின் இந்த செயலுக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து தனது சமூக வலைத்தளத்தில் கருத்து தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், " 'கோயில் நகர்' மதுரைக்கும், 'தென்னிந்திய மான்செஸ்டர்' கோவைக்கும் "NO METRO" என நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

அனைவருக்கும் பொதுவானதாகச் செயல்படுவதுதான் அரசுக்கான இலக்கணம். அதற்கு மாறாக, பா.ஜ.க.வைத் தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக இப்படி பழிவாங்குவது கீழ்மையான போக்கு. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள சிறிய இரண்டாம் நிலை மாநகரங்களுக்குக் கூட மெட்ரோ ரயிலுக்கான ஒப்புதல் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது அழகல்ல. கூட்டாட்சிக் கருத்தியலை இப்படி சிதைப்பதைச் சுயமரியாதைமிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

சென்னை மெட்ரோ பணிகளைத் தாமதப்படுத்தி முடக்க நடந்த முயற்சிகளை முறியடித்து முன்னேறினோம்! அதேபோல மதுரை - கோவையிலும் வருங்கால வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையான மெட்ரோ இரயிலைக் கொண்டு வருவோம்"என்று கூறியுள்ளார்.

# சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டிய ல் திருத்தப் பணிகளை தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் ஆய்வு

சின்னாளபட்டி. நவ 22

சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் தலைமையில் தி.மு.க தலைமை கழக ஆத்தூர் தொகுதி பொறுப்பாளர் கள்ளிப்பட்டிமணி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயளார் பிள்ளையார்நத்தம் முருகேசன் ஆகியோர் வார்டுவார்டாக சென்று ஆய்வு செய்தனர். சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சியில் சுமார் 40 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 26 ஆயிரம்வாக்காளர்கள்உள்ளனர். தற்போது அனைத்து வாக்குசாவடிபகுதிகளிலும், எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல்



திருத்தப்பணிகள் நடைபெற்று வருகிறது. தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்ஆத்தூர்நடராஜன் தலைமையில்தி.மு.க. மாநில விவசாய அணி இணைச்செயலாளரும், ஆத்தூர் தொகுதி தி.மு.க. தவீமைகழக பொறுப்பாளருமான கள்ளிபட்டிமணி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலளார் பிள்ளையார் நத்தம் முருகேசன் ஆகியோர் சின்னாளபட்டியில் உள்ள அனைத்து பகுதிக்கும் சென்று எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை பார்வையிட்டனர். ஆய்வின் போது சின்னாளபட்டி பேரூர் கழக தி.மு.க. பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நாககண்ணன், மெடிக்கல் கோபி, தம்பித்துரை, கீர்த்தனா மற்றும் இளைஞரணியைச் சேர்ந்த மணிமாறன், தி.மு.க. வார்டு செயலாளர் சைக்கிள் கடைமணி, தி.மு.க. நிர்வாகி பைனான்ஸ் ரவி, சிவக்குமார் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தேனியில் தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தேனி, நவ.22

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர் நல சங்க மாவட்ட தலைவர் மணிகண்டன் தலைமையிலும், தமிழ்நாடு உதவி தோட்டக்கலை அலுவலர் சங்கம் துணைத் தலைவர் சரவணன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது உதவி தோட்டக்கலை அலுவலர் சங்க தலைவர் பாண்டியன், செயலாளர் சிவக்குமார் ,பொருளாளர் மோகன்ராஜ் மாநில பொருளாளர் பழனிவேல் ராஜன் துணைத் தலைவர் கருப்புசாமி தணிக்கையாளர் பாலமுருகன் ஆகியோரிகள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் கோஷங்களை எழுப்பினர் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 60% உள்ள விவசாய பெருமக்களுக்கு தினசரி வருமானத்தைக் கொடுத்து, வெளிநாட்டு சந்தைகளின் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் தோட்டக்கலை பயிர்கள் தமிழ்நாட்டில் 94



லட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத் துறையின் வளர்ச்சி மற்றும் தனித்துவத்தை கருத்தில் கொண்டு 1979 ஆம் ஆண்டு தனித்துறையாக மாற்றப்பட்டு, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கருணாநிதி அவர்களால் துறை 2007ஆம் ஆண்டு மறுசீரமைப்பு (நி.ளி.:537) செய்யப்பட்ட பெருமை தோட்டக்கலைத்துறைக்கு உண்டு.

இத்தகைய வளர்ந்து வரும் தோட்டக்கலைத் துறையில் தமிழக அரசின் வேளாண்மை உழவர் நலத்துறையினால் தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள UATT 2.0 உழவர் அலுவலர் தொடர்பு (G.O. 230, dt. 30.10.2023) திட்டமானது முழுக்க முழுக்க தானிய மற்றும் மானாவாரி பயிர் சாகுபடி பரப்பை மட்டுமே கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. UATT 20 திட்டத்தின் மூலம் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க பிற துறை அலுவலர்களை இணைக்கும் பொழுது தோட்டக்கலை விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்கள் சரிவர எடுத்துரைக்கப்படாமல், விவசாய பெருமக்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். தோட்டக்கலை பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களை தோட்டக்கலைத் துறையில் தனித்துவ பட்டய படிப்பு படித்த தோட்டக்கலை துறை அலுவலர்களால் மட்டுமே விவசாய பெருமக்களுக்கு தெள்ளத் தெளிவாக சரியாக கொண்டு சேர்க்க முடியும். தமிழக அரசு UATT 20 திட்டத்தினை கைவிட வேண்டி இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மாநிலம் முழுவதும் உள்ள தோட்டக்கலைத் துறையின் அனைத்து நிலை தொழில்நுட்ப அலுவலர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

# காந்திகிராமம் பல்கலைகழகத்தில் தேசிய நூலக வாரவிழா 2025 பல்கலை துணைவேந்தர் ந.பஞ்சநதம் தவக்கி வைத்தார்

சின்னாளபட்டி, நவ.22

காந்திகிராமம் பல்கலைகழகத்தில் நடைபெற்ற தேசிய நூலக வாரவிழாவை 2025 பல்கலை துணைவேந்தர் ந.பஞ்சநதம் தவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் டாக்டர் ஜி.ராமச்சந்திரன் நூலகம் சார்பாக "தேசிய நூலக வாரவிழா 2025" துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கு துணைவேந்தர் நா.பஞ்சநதம் தலைமை தாங்கினார். நூலக பொறுப்பு மூத்த பேராசிரியர் சி.பிச்சை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழாவை துவக்கி




வைத்து மாணவர்கள் மத்தியில் பேசிய பல்கலை துணை வேந்தர் ந.பஞ்சநதம் பல்கலைகழகத்தில் பயிலும் ஆராய்ச்சி மாணவர்கள் நூலகத்தில் உள்ள ஆவணங்கள் மற்றும் மின்னணு இதழ்களை எவ்வாறு தங்களின் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் உயர்தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களில் உள்ள நூலகங்களுக்கும் சென்று அங்குள்ள ஆவணங்களைத் தங்களின் ஆராய்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். வுஜீழாவில் மூத்த பேராசிரியர்கள் கே.எஸ்.நக்கீரன், எஸ்.ராஜேந்திரன் (ஓய்வு), வெங்கட்ரவி ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள். பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் நூலக ஊழியர்கள் உட்பட கலந்து கொண்டனர். நிறைவாக நூலகர் பொறுப்பு ராமசாமி நன்றியுரை கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000